1991 அக்டோபர் 1]

132—

ராதாபுரம் தொகுதியில் பலநோக்குத் தொழிற்சாலை.

* 55 திருமதி ரமணி நல்லதம்பி :
திரு. ஆர். முருகையா பாண்டியன் :

மாண்புமிகு வனம் மற்றும் மீன்வளத்துறை அமைச்சர் கீழ்க் கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டத்திலிருந்து கால் நடைகள் கேரளாவிற்கு அதிக அளவில் கொண்டு செல்வதைத் தடுத்து, ராதாபுரம் தொகுதியில் இறைச்சி பதனிடுதல், தோல் பதனிடுதல், தோல் பொருட்கள் செய்தல் போன்ற பல்நோக்கு தொழிற்சாலை ஒன்று அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது இது போன்ற திட்டம் எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை.

திருமதி ரமணி நல்லதம்பி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே இந்த அவையில் குறிப்பிட்டுள்ளது போல ஏராளமான கால்நடைகள் ஆயிரக்கணக்கில் ஒவ்வொரு வாரமும் கேரளாவிற்கு கடத்தி செல்லப்படுகின்றன. என்னுடைய தொகுதி இன்டஸ்ட்ரியல் பேக்வர்ட் என்றும் அறிவிக்கப் பட்டிருக்கிறது. ஆனால் எந்தத் தொழிற்சாலையையும் ராதா புரம் தொகுதியில் ஆரம்பிக்கவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இதற்கு வாருங்கள், கால் நடைகள் கேரளாவிற்கு கொண்டு செல்வதைப் பற்றிக் கேளுங்கள்.

திருமதி ரமணி நல்லதம்பி : இவைகளைக் கருத்தில் கொண்டு அந்நியச் செலாவணி ஈட்டித் தரவல்ல, இந்த பல்நோக்கு தொழிற்சாலை ஒன்றை ராதாபுரம் தொகுதியிலே ஏற்படுத்தித்

தருவதுடன் இன்னும் கூட சாத்தியமானால் மீன் வளத்தைப் பயன்படுத்தி மீனிலும் ஒரு பல்நோக்கு திட்டம் ரெடிமேட் புட் இப்படி எல்லாம் செய்யக்கூடிய வகையில்...

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கால்நடைகளைக் கொண்டு செல்வதைத் தடுப்பது பற்றியது தான் மெயின் கேள்வி. இதில் தொழிற்சாலை ஆரம்பிப்பது ஊரகத் தொழில் துறை அமைச்சருடைய கவனத்திற்கு வரும். இந்த அமைச்சரிடம் வராது. இதை மட்டும் கேளுங்கள்.

திருமதி ரமணி நல்லதம்பி: அப்படிப்பட்ட ஒரு தொழிற்சாலை, கால்நடைகளையும், மீனையும் பயன்படுத்தி, ஒரு பல்நோக்கு தொழிற்சாலையை ஏற்படுத்தித் தர அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேசிய விவசாய குழு 'நேஷனல் அக்ரி கல்சுரல் கமிஷன்' நிர்ணயித்தபடி, மாநிலங்களுக்கிடையே கால்நடை செல்வதை சீயாரிசு செய்வதுடன், அவைகள் செல்வதைத் தடுக்கக் கூடாது என்று தெரிவிக்கிறது. மத்திய அரசின் ஆலோசனையும் எல்லா மாநிலங்களுக்கிடையே தரமான கால்நடை விற்பனைக்காக பொதுச் சந்தை வேண்டும் எனவும், மாநில உணர்ச்சிகள் இந்த விஷயத்தில் தலையிடக் கூடாது என்றும் தெரிவித்துள்ளது. இதன் அடிப்படையில்தான், தேவையில்லாத கால்நடைகள் தான் மாநிலங்களை விட்டு மாநிலங்கள் செல்கின்றன. அதேபோல நமக்கு செம்மறி ஆடுகள் மற்றும் வெள்ளாடுகள் ஆந்திரா மற்றும் கர்நாடகாவிலிருந்து தமிழ் நாட்டுக்கு வருகின்றன என்பது குறிப்பிடத் தக்கது.

1991 அக்டோபர் 1]

திரு. ஆர். முருகையா பாண்டியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலேயிருந்து அன்றாடம், கேரளாவிற்கு உணவுக்காக பல ஆயிரம் கால்நடைகள் நாகர் கோவில், கன்னியாகுமரி வழியாகவும், செங்கோட்டை வழியாகவும் அதிகமாக சென்று கொண்டிருக்கின்றன. அதிலே குறிப்பாக, கிழட்டு மாடுகள் போனால் கூட பரவாயில்லை. ஆனால் பெரும்பாலும் கன்றுகளும், பசு மாடுகளும் அங்கே செல்வதை நான் பார்க்கிறேன். இந்த நிலைமையைப் பார்க்கும் போது உண்மையிலேயே பரிதாபமாக இருக்கிறது. எனவே, இது போன்று மாடுகள் கேரளாவிற்கு சென்றால் தமிழ்நாட்டில் கால்நடைகளே இல்லாத நிலை ஏற்படும். அதிலும் குறிப்பாக நெல்லை மாவட்டத்திலேயிருந்து மிக அதிகமாக இவ்வாறு சென்று கொண்டிருக்கின்றன. எனவே, இதைத் தடுக்க அரசு ஏதாவது நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுகுறித்து இதற்கு முன்பே நான் விடை அளித்திருக்கிறேன். இருந்தாலும் மீண்டும் ஒரு முறை இதற்கு விடை அளிக்கின்றேன். தேவையில்லாத அல்லது உற்பத்தி திறன் குறைந்த கால்நடைகள் கேரளாவிற்கு செல்வதை ஒட்டு மொத்தமாக தடை செய்தால் தமிழ்நாட்டிலுள்ள உற்பத்தி திறன் உள்ள கால்நடைகளுக்குத் தேவையான தீவனப் பயிர்கள் கிடைப்பது பாதிக்கப்படும். தேசிய விவசாய குழு மாநிலங் களுக்கிடையே கால்நடைகள் செல்வதை சிபாரிசு செய்ததன் அடிப்படையில் கால்நடைகள் இங்கிருந்து செல்வதை நாம் தடுக்க முடியாது. அதேபோல செம்மறி ஆடுகள் மற்றும் வெள்ளாடுகள் ஆந்திரா மற்றும் கர்நாடகாவிலிருந்து தமிழ்நாட் டுக்கு வருகின்றன. மேற்கூறிய வெள்ளாடுகளும் செம்மறி ஆடு களும் இறைச்சிக்கு பயன்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : குறுகிய கால வினா எண் 3, திரு. எச். எம். ராஜு, மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர்.